ஊதல் ஆக்கை ஓம்புவீர்! உறுதி ஆனது அறிதிரேல்,
போதில் வண்டு பண்செயும் பூந் தண் கோவலூர்தனுள்,
வேதம் ஓது நெறியினான், வீரட்டானம் சேர்துமே.
Ye who foster your swollen body suffering from miserable dotage, cough
and phlegm, do you desire to know the way leading to the gain
of beatitude. Hie to Virattam and reach it and adore its God--
the Knower of Vedas who blesses with deliverance.
He is entempled in the flowery Kōvalūr where
bees bombinate in blossoms. 8

1102. ஆறு பட்ட புன்சடை அழகன், ஆயிழைக்கு ஒரு-
கூறு பட்ட மேனியான், குழகன், கோவலூர் தனுள்--
நீறுபட்ட கோலத்தான், நீலகண்டன், இருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான்,-வீரட்டானம் சேர்துமே.
He is the Handsome One whose ruddy matted crest sports
the river Ganga; He is concorporate with His bejewelled Woman;
He is the ever-young One entempled in Kōvalūr;
in His splendorous and ash bedaubed form; He is
imperceivable by Brahma and Vishnu. 9
Come, let us fare forth and reach His Virattam.

1103. குறிகொள், ஆழி நெஞ்சமே! கூறை துவர் இட்டார்களும்,
அறிவு இலாத அமணர், சொல் அவத்தம் ஆவது அறிதிரேல்,
பொறி கொள் வண்டு பண்செயும் பூந் தண் கோவலூர் தனில்,
வெறி கொள் கங்கை தாங்கினான், வீரட்டானம் சேர்துமே.

O heart endowed with profundity, if you are convinced of the futility of the words
of the ochre-shrouded Buddhists and the addle-pated Samaṇas,
come with me; let us reach and adore Him in His
Virattam at the flowery Kōvalūr where speckled bees hum in *pann*.
Lo, He is the God that sports on His crest the suaveolent Ganga. 10

1104. கழியொடு உலவு கானல் சூழ் காழி ஞானசம்பந்தன்,
பழிகள், தீரச் சொன்ன சொல் பாவநாசம் ஆதலால்,
அழிவுஇலீர், கொண்டு ஏத்துமின்! அம் தண் கோவலூர்தனில்,
விழிகொள் பூதப்படையினான், வீரட்டானம் சேர்துமே.

Gnānasambandhan of Kāzhi which is close to the creeks girding
the foreshore gardens, has sung these hymns which will altogether annul
blame and cause the perishing of sins.
Do hail these psalms to come by athanasia.
Lo, let us hie and reach Virattam of the God
of the large-eyed Bhūtas who is enshrined
in the beauteous and cool Kōvalūr and pay obeisance to Him. 11

101. திரு ஆரூர்   நட்டராகம்

திருவிராகம்

101. TIRUVĀRŪR

1105. பருக் கை யானை மத்தகத்து அரிக்குலத்து உகிர்ப் புக
நெருக்கி, வாய நித்திலம் நிரக்கு நீள் பொருப்பன் ஊர்--
தருக் கொள் சோலை சூழ, நீடு மாட மாளிகைக் கொடி
அருக்கன்மண்டலத்து அணாவும் அம் தண் ஆரூர்என்பதே.

In Kailās which is our God's Mount, the clans
of lion fighting against a long-trunked tusker,
tear open its head whence spill pearls galore.
Lo, He is entempled in the cool and beauteous Ārūr
which is girt with green gardens.
In this urbs flags wafting on its storeyed mansions brush the Surya-mandala. 1

1106. விண்ட வெள்எருக்கு, அலர்ந்த வன்னி, கொன்றை, மத்தமும்,
இண்டை, கொண்ட செஞ்சடைமுடிச் சிவன் இருந்த ஊர்--
கெண்டை கொண்டு அலர்ந்த கண்ணினார்கள் கீத ஓசை போய்,
அண்டர்அண்டம் ஊடு அறுக்கும் அம் தண் ஆரூர் என்பதே.

The ruddy matted crest of God Siva is adorned with *intai* wreath
woven of the white and blown *erukku* blossoms,
the flowers of kondrai and *ūmattham* and the leaves of *vanni.*
He is entempled in the cool and beauteous Ārūr where the melodious airs
sung by women whose broad eyes are like unto *Kendai* fish,
soar up and up and pervade the ethereal world. 2

1107. கறுத்த நஞ்சம் உண்டு இருண்ட கண்டர், காலன் இன் உயிர்
மறுத்து மாணிதன்தன் ஆகம் வண்மை செய்த மைந்தன், ஊர்--
வெறித்து மேதி ஓடி, மூசு வள்ளை வெள்ளை நீள்கொடி
அறுத்து மண்டி, ஆவி பாயும் அம் தண் ஆரூர் என்பதே.

Our God quaffed the venom and retained it in His throat that turned murky.
When Yama strode forth to snatch the life of the Brahmachāri,
the Puissant One saved him and blessed him with the ever-young
athanasic life. He is entempled in the beauteous and cool Ārūr
where the affrighted buffaloes run snapping
the argent *vallai* lianas and leap into pools. 3

1108. அஞ்சும் ஒன்றி, ஆறு வீசி, நீறு பூசி மேனியில்,
குஞ்சி ஆர வந்திசெய்ய, "அஞ்சல்!" என்னி மன்னும் ஊர்--
பஞ்சி ஆரும் மெல்அடி, பணைத்த கொங்கை, நுண்இடை,
அம்சொலார் அரங்கு எடுக்கும் அம்தண் ஆரூர் என்பதே.

Our God blesses them with refuge proof against dread,
who have thrown away the six evil qualities and who adorned
with the holy ash in their bodies, adore Him with their heads.
He is entempled in the cool and beauteous Ārūr
where women whose breasts are buxon,
whose waists are slender and whose words are soft and sweet,
ascend the forums and enact their dance. 4

1109. சங்கு உலாவு திங்கள் சூடி, தன்னை உன்னுவார் மனத்து
அங்கு உலாவி நின்ற எங்கள் ஆதிதேவன் மன்னும் ஊர்--
தெங்கு உலாவு சோலை, நீடு தேன் உலாவு செண்பகம்
அங்கு உலாவி, அண்டம் நாறும் அம் தண் ஆரூர்என்பதே.

Our God sports on His crest the chank-like and white crescent;
He abides in the *manams* of those that ever meditate on Him.
He, indeed, is our God—the Ens Original.
He is entempled in the cool and beauteous Ārūr
girt with coconut groves and shanbaga gardens
whose incense pervades even the ethereal world. 5

1110. கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டு, அருத்தியோடு
உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்து உளான் உகந்த ஊர்--
துள்ளி வாளை பாய் வயல், கரும்பு உலாவு நெய்தல்வாய்
அள்ளல் நாரை ஆரல் வாரும், அம் தண் ஆரூர் என்பதே.
Our God indwells the hearts of those who have thrown
away their evil thoughts bred by the furtive
and deceitful heart, and meditate on Him with all their soul.

He is, in delight great, entempled in the cool and beauteous Ārūr
abounding in fields where *vālais* leap and sport;
here bees bombilate over *neytal* flowers and herons
snatch the *āral* fish from the miry lands, and eat them. 6

1111. கங்கை பொங்கு செஞ்சடைக் கரந்த கண்டர், காமனை
மங்க வெங்கணால் விழித்த மங்கைபங்கன், மன்னும் ஊர்--
தெங்கின்ஊடு போகி வாழை கொத்து இறுத்து, மாவின்மேல்
அம் கண் மந்தி முந்தி ஏறும் அம் தண் ஆரூர் என்பதே.

Our omnipresent God concealed in His ruddy matted crest the swelling
flood of the Ganga; with His fiery eye in His forehead,
He smote Manmata.He is concorporate with His Woman.
He is entempled in the cool and beauteous Ārūr where the comely-eyed
female monkeys passing through coconut trees snatch the banana bunches
and eventually climb the mango trees. 7

1112. வரைத்தலம்(ம்) எடுத்தவன் முடித்தலம்(ம்) உரத்தொடும்
நெரித்தவன், புரத்தை முன்(ன்) எரித்தவன்(ன்), இருந்த ஊர்--
நிரைத்த மாளிகைத் திருவின் நேர் அனார்கள், வெண்நகை
அரத்த வாய் மடந்தைமார்கள் ஆடும் ஆரூர் என்பதே.
Our God crushed the heads and the bosom of Ravana
who durst uproot His Mount Kailās. He, of yore, gutted with fire
the three walled-citadels. He is entempled in the cool
and beauteous Ārūr where Lakshmi-like women of argent teeth
and blood-red lips dwell in the serried rows of mansions
and perform their dance. 8

1113. இருந்தவன் கிடந்தவன்(ன்), இடந்து விண் பறந்து, மெய்
வருந்தியும் அளப்பு ஒணாத வானவன் மகிழ்ந்த ஊர்--
செருந்தி, ஞாழல், புன்னை, வன்னி, செண்பகம், செழுங் குரா,
அரும்பு சோலை வாசம் நாறும் அம் தண் ஆரூர்என்பதே.

The one ensconced on the Lotus and the one lying
recumbent on the snake-bed, flew up and burrowed
deep and languished sore; yet these could not behold His crown or feet.
He is blissfully entempled in the cool and beauteous Ārūr
rich in incense-breathing gardens where bloom
serunti, gnāzhal, punnai, vanni, shanbagam and splendorous kura. 9

1114. பறித்த வெண்தலைக் கடுப் படுத்த மேனியார் தவம்
வெறித்த வேடன், வேலைநஞ்சம் உண்ட கண்டன், மேவும் ஊர்--
மறித்து மண்டு வண்டல் வாரி மீண்டு நீர் வயல் செநெல்
அறுத்த வாய் அசும்பு பாயும் அம் தண் ஆரூர்என்பதே.
As they have plucked away all their hair, their pates are white;
these are Samanas whose bodies are besmeared with
the powder of myrobalan; our God is dreaded by these pseudo-tapaswis.
His throat is stained murky by the venom He quaffed.
He is entempled in the cool and beauteous Ārūr
in whose fields the loam is dug up again and again
to dam the field-water. Lo, even after the harvest
of *sennel*, the oozing of water in the fields ceases not. 10

1115. வல்லி சோலை சூதம் நீடு மன்னு வீதி--பொன் உலா
அல்லிமாது அமர்ந்து இருந்த--அம் தண் ஆரூர் ஆதியை,
நல்ல சொல்லும் ஞானசம்பந்தன் நாவின் இன்உரை
வல்ல தொண்டர், வானம் ஆள வல்லர், வாய்மைஆகவே.
Our God and His Consort Alliyamkothai are enshrined
in Ārūr where in its gardens thrive thick
the lianas; its streets are dotted with mango trees.
On Him, the Primal God, Gnānasambandhan whose
words ever reveal what is good,has sung these sweet hymns.
The servitors who are valiant in these psalms, will,
it is certes, rule the celestial world. 11

102. திருச் சிரபுரம்

நட்டராகம்

102. TIRUCCHIRAPURAM

1116. அன்னமென் நடை அரிவையோடு இனிது உறை
அமரர்தம் பெருமானார்,
மின்னுசெஞ்சடை வெள்எருக்கம்மலர்
வைத்தவர், வேதம்தாம்
பன்னும் நன்பொருள் பயந்தவர்--பரு மதில்
சிரபுரத்தார்; சீர் ஆர்
பொன்னின் மா மலர் அடி தொழும் அடியவர்
வினையொடும் பொருந்தாரே.

He is the God of the immortal Devas; He is concorporate
with His Woman of soft and swan-like gait. On His fulgurant
and ruddy matted crest, He sports the white madar flower.
He has revealed the goodly messages through His Vedas.
He is the glorious One entempled in Sirapuram. Servitors who hail
His auric and great flower-like feet will be exempt from Karma. 1

1117. கோல மா கரி உரித்தவர்; அரவொடும்
ஏனக்கொம்பு, இள ஆமை,
சாலப் பூண்டு, தண்மதிஅது சூடிய
சங்கரனார்; தம்மைப்
போலத் தம் அடியார்க்கும் இன்பு அளிப்பவர்;
பொருகடல்விடம் உண்ட
நீலத்து ஆர் மிடற்று அண்ணலார்; சிரபுரம்
தொழ, வினை நில்லாவே.

He flayed the great and splendorous Tusker; He is
adorned with a serpent, the tusk of the Hog and the carapace
of the Tortoise; He is eke decked with the cool crescent on His chest.
He is Sankara who bestows bliss like His own on His servitors.
He quaffed the venom of the sea and blued His throat. Karma will quit
them that adore the Noble One who is entempled in Sirapuram. 2

1118. மானத் திண்புய வரிசிலைப் பார்த்தனைத்
தவம் கெட மதித்து, அன்று,
கானத்தே திரி வேடனாய், அமர் செயக்
கண்டு, அருள்புரிந்தார்--பூந்
தேனைத் தேர்ந்து சேர் வண்டுகள் திரிதரும்
சிரபுரத்து உறை--எங்கள்
கோனைக் கும்பிடும் அடியவரைக் கொடுவினை,
குற்றங்கள், குறுகாவே.

He undid the *tapas* of the mighty-armed Arjuna,
the one skilled in the wielding of the well-crafted bow.
Deeming him worthy, our God manifested before him
in the guise of a forester, bore testimony to his
martial skill and blessed him.
He, our Monarch, is entempled in Sirapuram in whose
flowery gardens bees buzz seeking nectar.
Cruel karma and crimes will not touch His adorers. 3

1119. மாணிதன் உயிர் மதித்து உண வந்த அக்
காலனை உதைசெய்தார்,
பேணி உள்கும் மெய் அடியவர் பெருந் துயர்ப்
பிணக்கு அறுத்து அருள்செய்வார்,
வேணி வெண்பிறை உடையவர், வியன்புகழ்ச்
சிரபுரத்து அமர்கின்ற
ஆணிப்பொன்னினை, அடி தொழும் அடியவர்க்கு
அருவினை அடையாவே.

Yama was aware of the worth of the Brahmachāri; so, he himself
came forth to snach his life. Our God kicked that Yama to death.
Lo, our God undoes the cause resulting in the suffering from exceeding
pain of His true devotees who constantly think on Him.
He sports on His matted hair the white crescent.

He is the Gold of irreckonable touch; He abides at
Sirapuram of widely pervading renown.
Devotees that adore His feet are exempt from re-birth. 4

1120. பாரும், நீரொடு, பல்கதிர் இரவியும்,
பனிமதி, ஆகாசம்,
ஓரும் வாயும், ஒண்கனல், வேள்வியில்-
தலைவனும்ஆய் நின்றார்--
சேரும் சந்தனம் அகிலொடு வந்துஇழி
செழும் புனல் கோட்டாறு
வாரும் தண்புனல் சூழ்-சிரபுரம் தொழும்
அடியவர் வருந்தாரே.

He is the One that is the earth, the water, the many-rayed sun, the cool moon,
the space, the moving air, the fire and the soul that performs
sacrifices.He is entempled in Sirapuram girt with the swift
river Kōttāṟu that rolls in its current
eaglewood and sandalwood, and feeds the cool pools.
Adoring servitors will never suffer from sorrow. 5

1121. ஊழி அந்தத்தில், ஒலிகடல் ஓட்டந்து, இவ்
உலகங்கள் அவை மூட,
"ஆழி, எந்தை!" என்று அமரர்கள் சரண்புக,
அந்தரத்து உயர்ந்தார்தாம்,
யாழின் நேர் மொழி ஏழையோடு இனிது உறை
இன்பன், எம்பெருமானார்,
வாழி மா நகர்ச்சிரபுரம் தொழுது எழ,
வல்வினை அடையாவே.

When at the end of the aeon the raging seas rushed
amain and covered all the worlds, the heavenly Devas
hailed Him as the Sea of Grace and their Sire.

At this, He caused Sirapuram float on the waters of Dissolution.
He is, indeed, our God of bliss who is concorporate
with His Consort whose words are sweet as yāzh's melody.
He abides at the ever-thrilling city of Sirapuram the great.
Cruel karma will not touch them that first hail Him and wake up. 6

1122. பேய்கள் பாட, பல்பூதங்கள் துதிசெய
பிணம் இடு சுடுகாட்டில்,
வேய் கொள் தோளிதான் வெள்கிட, மா நடம்ஆடும்
வித்தகனார்; ஒண்
சாய்கள் தான் மிக உடைய தண் மறையவர்
தகு சிரபுரத்தார்தாம்;
தாய்கள் ஆயினார், பல்உயிர்க்கும்; தமைத்
தொழுமவர் தளராரே.

Our God is the Adept that enacts the great dance
in the ghat where corpses are cremated,
to the singing of ghouls and the hailing of the Bhūtas,
witnessing which Kāli whose arms are supple as bamboo,
stood abashed. He is hailed by the multitudinously glorious
Vedic Brahmins of the stately Sirapuram.
Lo, His worshippers will never wilt at all. 7

1123. இலங்கு பூண்வரை மார்பு உடை இராவணன்
எழில் கொள் வெற்பு எடுத்து, அன்று,
கலங்கச் செய்தலும், கண்டு, தம் கழல்அடி
நெரிய வைத்து, அருள்செய்தார்--
புலங்கள் செங்கழுநீர்மலர்த் தென்றல் மன்று அதன்இடைப்
புகுந்து ஆரும்,
குலம் கொள் மா மறையவர்--சிரபுரம் தொழுது
எழ, வினை குறுகாவே.

He was decked with bright jewels; His chest was like unto a hill,
when he hight Ravana durst uproot our God's Mount Kailās causing
commotion, Siva witnessing it pressed a toe of His ankleted foot
and crushed him; then when be rued, He relented and blessed him.
Lo, our God is entempled in Sirapurm where dwell
the great Vedic Brahmins of lofty lineage.
If You adore Him in His delubrum at Sirapuram, karma canst not touch you. 8

1124. வண்டு சென்று அணை மலர் மிசை நான்முகன்,
மாயன், என்று இவர் அன்று
கண்டு கொள்ள, ஓர் ஏனமோடு அன்னம்ஆய்,
கிளறியும் பறந்தும், தாம்
பண்டு கண்டது காணவே நீண்ட எம்
பசுபதி; பரமேட்டி;
கொண்ட செல்வத்துச் சிரபுரம் தொழுது எழ,
வினை அவை கூடாவே.

The two, namely the Four-faced Brahma seated on the Lotus
bebuzzed by bees, and Vishnu went in quest of Siva in the guise of a cob
and a boar; they but beheld what they had beheld erewhile,
namely the flame-form but not its base or top.
Thus did He rise up and up and burrow deep and deeper without end.
He is the God of souls; He is the Ens entium.
It is He who is entempled in the opulent Sirapuram.
Karma canst not afflict them that bow low
in His presence and rise up, all the while contemplating Him. 9

1125. பறித்த புன்தலைக் குண்டிகைச் சமணரும்,
பார்மிசைத் துவர் தோய்ந்த
செறித்த சீவரத் தேரரும், தேர்கிலாத்
தேவர்கள் பெருமானார்--

முறித்து மேதிகள் கரும்பு தின்று ஆவியில்
மூழ்கிட, இள வாளை
வெறித்துப் பாய் வயல்--சிரபுரம் தொழ, வினை
விட்டிடும், மிகத் தானே.

With their hair altogether plucked away, their heads are sore;
these are Samanas who tote water-jugs in their hands;
the Buddhists are shrouded in ochre-robes; these are incompetent
to cognize Him.
Our God is the God of the supernals; He is entempled in
Sirapuram where breaking and eating sweetcanes
the buffaloes eventually rush to the pools and plunge in them.
This witnessing, young *vālais* stare in dread
and leap into the fields close by.
Lo, our karma will quit us forthwith, if we adore our God at His Sirapuram. 10

1126. பரசுபாணியை, பத்தர்கள்அத்தனை,
பை அரவோடு அக்கு
நிரை செய் பூண் திருமார்பு உடை நிமலனை,
நித்திலப்பெருந்தொத்தை,
விரை செய் பூம்பொழில் சிரபுரத்து அண்ணலை,
விண்ணவர் பெருமானை,
பரவு சம்பந்தன் செந்தமிழ் வல்லவர்
பரமனைப் பணிவாரே.

He, our God, wields an axe; He is the Sire of bhaktas.
His beautiful chest is bedecked with the hooded
serpent of poisonous sacs and a wreath of bones.
He is the *Nimalan*; He dazzles like a margariteceous heap.
The Noble One is entempled in Sirapuram dight
with gardens rich in suaveolent blossoms.

He is the God of the celestials.

On Him, Gnānasambandhan has sung these hymns in classical Tamiḷ. Lo, they that are valiant in these psalms, will gain the beatitude of ever-adoring Him. 11

103.திரு அம்பர்மாகாளம்

நட்டராகம்

103. AMBARMĀKĀḶAM

1127. புல்கு பொன்நிறம் புரிசடை நெடு முடிப் போழ்இளமதி சூடி,
பில்கு தேன் உடை நறுமலர்க்கொன்றையும் பிணையல் செய்தவர் மேய--
மல்கு தண்துறை அரிசிலின் வடகரை, வருபுனல்--மாகாளம்,
அல்லும் நண்பகலும் தொழும் அடியவர்க்கு அருவினை அடையாவே.

On His golden strands of lofty matted crest, He sports
the sliced moon; eke is it adorned with a wreath
of fragrant and melliferous *kondrais*.
Our God is entempled in Ambarmākāḷam on the northern
bank of the Arisil abounding in cool fords.
Well-nigh irremovable karma will not afflict His
devotees who hail Him night and day. 1

1128. அரவம் ஆட்டுவர்; அம் துகில் புலிஅதள்; அங்கையில் அனல் ஏந்தி,
இரவும் ஆடுவர்; இவை இவர் சரிதைகள்! இசைவன, பலபூதம்;
மரவம் தோய் பொழில், அரிசிலின் வடகரை, வருபுனல் மாகாளம்
பரவியும் பணிந்து ஏத்த வல்லார் அவர் பயன் தலைப்படுவாரே.

He causes snakes to dance; He is clad in tiger-skin; He holds fire in
His hand and dances during night. His annals are replete with His
glorious deeds and are hailed and sung by the Bhūtas.
He is entempled on the northern bank of the Arisil
girt with gardens abounding in *maravam* trees.
They that bow low in His presence and hail Him
heartily, will come by fruitful consequences. 2

1129. குணங்கள் கூறியும் குற்றங்கள் பரவியும் குரைகழல் அடி சேரக்
கணங்கள் பாடவும், கண்டவர் பரவவும், கருத்து அறிந்தவர் மேய--
மணம் கொள் பூம்பொழில், அரிசிலின் வடகரை, வருபுனல்--மாகாளம்
வணங்கும் உள்ளமொடு அணைய வல்லார்களை வல்வினை அடையாவே.

Hail His gunas; confess aloud your blemishes. Become competent
to seek after His sacred feet. Lo, Bhūta-Hosts hymn Him; loving devotees
hail and adore Him. He is entempled on the northern bank of the Arisil
at Ambarmākāḷam rich in flowery gardens.
He, our God, divines our wishes and bestows grace on us.
Cruel Karma will not afflict them that reach
His shrine to adore Him with all their heart. 3

1130. எங்கும் ஏதும் ஓர் பிணி இலர், கேடு இலர், இழை வளர் நறுங்கொன்றை
தங்கு தொங்கலும் தாமமும் கண்ணியும் தாம் மகிழ்ந்தவர், மேய--
மங்குல் தோய் பொழில், அரிசிலின் வடகரை, வருபுனல்--மாகாளம்,
கங்குலும் பகலும் தொழும் அடியவர் காதன்மை உடையாரே.

Our God is entempled on the northern bank of the Arisil at Ambarmākaḷam
abounding in gardens on whose tops clouds do rest.
In joy, He wears a chaplet, a wreath and a garland woven of fragrant *kondrais*.
They that hail Him day and night with loving devotion,
wherever they may be, will be free from illness and blemish.
Their very being gets suffused with the love of Siva. 4

1131. நெதியம் என் உள? போகம் மற்று என் உள? நிலம்மிசை நலம்ஆய
கதியம் என் உள? வானவர் என் உளர்?--கருதிய பொருள் கூடில்--
மதியம் தோய் பொழில், அரிசிலின் வடகரை, வருபுனல்--மாகாளம்,
புதிய பூவொடு சாந்தமும் புகையும் கொண்டு ஏத்துதல் புரிந்தோர்க்கே.

Our God is entempled on the northern bank of the Arisil at Ambarmākāḷam.
Unto them that hail Him with fresh flowers, sandal paste
and incense-breathing smoke and thus adore Him,
of what avail are wealth, wholsesome enjoyment
and phenomenal earthly joys and paradisal pleasure?
They have gained what ought to be gained. 5

1132. கண் உலாவிய கதிர்ஒளி முடிமிசைக் கனல்விடு சுடர் நாகம்,
தெண் நிலாவொடு, திலகமும், நகுதலை, திகழ வைத்தவர் மேய--
மண் உலாம் பொழில், அரிசிலின் வடகரை, வருபுனல்--மாகாளம்
உள்-நிலாம் நினைப்பு உடையவர் யாவர், இவ் உலகினில் உயர்வாரே.

Our God is entempled on the northern bank of Arisil at Ambarmākāḷam
rich in fecund gardens. On His eesome and radiant crest, He sports the snake,
the pellucid crescent and a smiling skull. He is adorned with a tilak.
Whoever they be that embosom and hail Him will flourish in accrescent happiness. 6

1133. தூசு தான் அரைத் தோல் உடை, கண்ணி அம் சுடர்விடு நறுங்கொன்றை,
பூசு வெண்பொடிப் பூசுவது, அன்றியும், புகழ் புரிந்தவர் மேய--
மாசு உலாம் பொழில், அரிசிலின் வடகரை, வருபுனல்--மாகாளம்
பேசு நீர்மையர் யாவர், இவ் உலகினில் பெருமையைப் பெறுவாரே.

Our God is entempled on the northern bank of Arisil at Ambarmākāḷam
rich in cloud-capped gardens. His waist is clad in a skin;
His chaplet is woven of bright and fragrant kondrais; He is bedaubed
with the white powder of ash; glorious are His deeds.
They that hail His delubrum will flourish gloriously on this earth. 7

1134. பவ்வம் ஆர் கடல் இலங்கையர்கோன் தனைப் பருவரைகீழ் ஊன்றி,
எவ்வம் தீர அன்று இமையவர்க்கு அருள்செய்த இறையவன் உறை கோயில்--
மவ்வம் தோய் பொழில், அரிசிலின் வடகரை, வருபுனல்--மாகாளம்
கவ்வையால்-தொழும் அடியவர் மேல் வினை கனல்இடைச் செதிள் அன்றே!

Our God is entempled on the northern bank of the Arisil at Ambarmākāḷam
rich in cloud-capped gardens. Of yore, He crushed under His Mount
the sovereign of Lanka encircled by the ocean.
He quelled the distress of Devas and bestowed grace on them.
The karma of those that adore Him with penchant will perish, like sliver in fire. 8

1135. உய்யும் காரணம் உண்டு என்று கருதுமின்! ஒளி கிளர் மலரோனும்,
பை கொள் பாம்பு அணைப்பள்ளி கொள் அண்ணலும், பரவ நின்றவர் மேய--
மை உலாம் பொழில், அரிசிலின் வடகரை, வருபுனல்--மாகாளம்
கையினால்-தொழுது, அவலமும் பிணியும் தம் கவலையும் களைவாரே.

Our God is entempled on the northern bank of the Arisil at Ambarmākāḷam
dight with imbrowned gardens. Of yore, He stood inaccessible to Brahma
whose seat is the bright Lotus and Vishnu, the great one
that slumbers on His bed of snake the sacs of which hold poison.
His worshippers adore Him with fresh flowers
and do away with their blame, illness and manifold worry.
Think on this source of redemption and gain it. 9

1136. பிண்டிபாலரும், மண்டை கொள் தேரரும், பீலி கொண்டு உழல்வாரும்,
கண்ட நூலரும், கடுந் தொழிலாளரும், கழற நின்றவர் மேய--
வண்டு உலாம் பொழில், அரிசிலின் வடகரை, வருபுனல்--மாகாளம்,
பண்டு நாம் செய்த பாவங்கள் பற்றுஅறப் பரவுதல் செய்வோமே.
Our God is entempled on the northern bank of the Arisil
at Ambarmākāḷam in the gardens of which bees bombinate.
Samaṇas wield the weapon Piṇḍipālam, its top decked with the feather
of peacock and roam about; the Buddhists tote *mantais*, their begging-bowls.
These follow opuses that are good only in their light and perform
cruel deeds; let us not heed their libellous inculpations.
To snap the fettering attachment, engendered
by our past sins, let us hail and adore our God. 10

1137. மாறு தன்னொடு மண்மிசை இல்லது வருபுனல் மாகாளத்து,
ஈறும் ஆதியும் ஆகிய சோதியை, ஏறு அமர் பெருமானை,
நாறுபூம்பொழில் காழியுள் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
கூறுவாரையும் கேட்க வல்லாரையும் குற்றங்கள் குறுகாவே.

On this earth, Ambarmākāḷam is beyond compare. On its God, the Omega
and Alpha, the Empyrean Effulgence, the Rider of the Bull,
Gnānasambandan of Kāzhi which abounds in fragrant and flowery gardens,
has sung this garland of hymns in Tamiḻ.
Sins will not afflict them that recite
these psalms and them that listen to such recitation. 11

104. திருக் கடிக்குளம் நட்டராகம்

104. TIRUKKAṬIKKUḶAM

1138. பொடி கொள் மேனி வெண்நூலினர், தோலினர், புலிஉரி-அதள் ஆடை,
கொடி கொள் ஏற்றினர், மணி, கிணின் என வரு குரைகழல் சிலம்பு ஆர்க்க,
கடி கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்து உறையும் கற்பகத்தை, தம்
முடிகள் சாய்த்து அடி வீழ்தரும் அடியரை முன்வினை மூடாவே.

Our God's frame is bedaubed with the powder of ash; He wears
the sacred thread; of yore, He was mantled in the tusker's skin.
He is clad in a tiger-skin; His flag sports the signum of His Bull;
His right knee is fastened to a tinkling bell. His resounding anklets
summon us to adore Him. He, the Karpaka, is entempled in Kaṭikkuḷam
girt with fragrant and flowery gardens.
The past karma of His servitors that prostrate before Him
with their bent heads and thus adore Him, will become non-est. 1

1139. விண்களார் தொழும் விளக்கினை, துளக்கு இலா விகிர்தனை, விழவு ஆரும்
மண்களார் துதித்து அன்பராய் இன்புஉறும் வள்ளலை, மருவி, தம்
கண்கள் ஆர்தரக் கண்டு, நம் கடிக்குளத்து உறைதரு கற்பகத்தைப்
பண்கள் ஆர்தரப் பாடுவார் கேடு இலர்; பழி இலர்; புகழ் ஆமே.

Our God is the Lamp adored by the supernals; He is the fatigueless *Vikirtan*;
He is the munificent patron who is adored in delight great,
by those of this earth abounding in festivities.
They that adore Him, the Karpaka entempled in Kaṭikkuḷam
with longing eyes that revel in joy, and hail Him in hymns
suffused with *pann*, are truly the blemishless and blameless.
These are, indeed, the glorious devotees. 2

1140. பொங்கு நன் கரிஉரி அது போர்ப்பது, புலி அதள் உடை, நாகம்
தங்க மங்கையைப் பாகம்அது உடையவர், தழல் புரை திருமேனிக்
கங்கை சேர்தரு சடையினர், கடிக்குளத்து உறைதரு கற்பகத்தை,
எங்கும் ஏத்தி நின்று இன்புஉறும் அடியரை இடும்பை வந்து அடையாவே.

Of yore, our God mantled Himself in the skin of
the mighty Tusker abounding in must.
A fiery serpent adorns Him who is clad in the skin of a tiger;
He is concorporate with His Woman; His sacred body
blazes like flame; the Ganga adorns His matted crest.
He is the Karpaka entempled in Kaṭikkuḷam; troubles
will not assail the devotees who adore Him, wherever they be. 3

1141. நீர் கொள் நீள்சடைமுடியனை, நித்திலத்தொத்தினை, நிகர் இல்லாப்
பார் கொள் பார்இடத்தவர் தொழும் பவளத்தை, பசும்பொன்னை, விசும்பு ஆரும்
கார் கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்து உறையும் கற்பகம் தன்னை,
சீர் கொள் செல்வங்கள் ஏத்த வல்லார் வினை தேய்வது திணம் ஆமே.

He bears on His long matted crest the river Ganga;
He blazes like a margaritaceous heap; He is the Coral
adored by the terrestrials; He is the ever-fresh Gold.
Our God is the Karpaka enshrined in Kaṭikkuḷam
on whose flowery gardens clouds do rest.

The karma of those that hail His glorious
and manifold opulence, will waste away altogether. 4

1142. சுரும்பு சேர் சடைமுடியினன், மதியொடு துன்னிய தழல் நாகம்,
அரும்பு தாது அவிழ்ந்து அலர்ந்தன மலர்பல கொண்டு அடியவர் போற்றக்
கரும்பு கார் மலி கொடி மிடை கடிக்குளத்து உறைதரு கற்பகத்தை,
விரும்பு வேட்கையோடு உள் மகிழ்ந்து உரைப்பவர் விதி உடையவர் தாமே.

His matted crest is decked with flowers buzzed by bees;
annulling the hostility betwixt the fierce snake
and the moon, He keeps them juxtaposed on His crown.
He is hailed with blowing flowers galore laden with pollen, by His devotees.
He is the Karpaka enshrined in Kaṭikkuḷam where
thrive sweetcanes entwined with sky-high lianas.
They that adore Him in delight great with their hands,
in intense longing, are truly blessed with divine destiny. 5

1143. மாது இலங்கிய பாகத்தன்; மதியமொடு, அலைபுனல், அழல், நாகம்,
போது இலங்கிய கொன்றையும், மத்தமும், புரிசடைக்கு அழகுஆக,
காது இலங்கிய குழையினன்; கடிக்குளத்து உறைதரு கற்பகத்தின்
பாதம் கைதொழுது ஏத்த வல்லார் வினை பற்றுஅறக் கெடும் அன்றே.
He is concorporate with His Woman; He sports on the strands of His
matted crest, the crescent, the billowy Ganga, the wrathful snake,
the flowers of kondrai and *ūmattham*.
A *kuzhai* dangles in the lobe of His comely ear.
The cruel karma of those that hail with their hands
the Karpaka abiding at Kaṭikkuḷam will vamoose tracelessly. 6

1144. குலவு கோலத்த கொடி நெடுமாடங்கள்குழாம், பலகுளிர்பொய்கை,
உலவு புள்இனம், அன்னங்கள் ஆலிடும், பூவை சேரும்--கூந்தல்
கலவை சேர்தரு கண்ணியன்--கடிக்குளத்து உறையும் கற்பகத்தைச் சீர்
நிலவி நின்றுநின்று ஏத்துவார்மேல் வினை நிற்ககில்லாதானே.

Our God, the Karpaka, is enshrined in Kaṭikkuḷam which is dight with lofty
and storeyed mansions to which are fastened the splendorous streamers.
Its pools are frequented by fish-eating birds and swans that sport in joy.
Our God adorned with a chaplet is concorporate with
His Consort whose coiffure is decked with flowers.
Karma will not stick to them that abide here
gloriously, foregather in His delubrum and hail and adore Him. 7

1145. மடுத்த வாள் அரக்கன்(ன்) அவன் மலை தன்மேல் மதிஇலாமையில் ஓடி
எடுத்தலும், முடிதோள்கரம் நெரிந்து இற இறையவன் விரல் ஊன்ற,
கடுத்து வாயொடு கை எடுத்து அலறிட, கடிக்குளம் தனில் மேவிக்
கொடுத்த பேர் அருள் கூத்தனை ஏத்துவார் குணம் உடையவர்தாமே.

When Ravana, the wielder of a sword that pierces to death his adversaries,
brainlessly durst uproot His Kailās, our God, with a toe of His foot,
crushed his heads, shoulders and hands.
Then when he rued, cried aloud and adored Him
with His hands, He relented and blessed him.
Our God, the Dancer of infinite grace, is entempled in Kaṭikuḷam.
They that hail Him sincerely are the ones that stand
blessed with virtuous qualities. 8

1146. நீரின் ஆர் கடல்-துயின்றவன். அயனொடு, நிகழ் அடி முடி காணார்;
பாரின் ஆர் விசும்பு உற, பரந்து எழுந்தது ஓர் பவளத்தின் படி ஆகி,
காரின் ஆர் பொழில் சூழ்தரு கடிக்குளத்து உறையும் கற்பகத்தின் தன்
சீரின் ஆர் கழல் ஏத்த வல்லார்களைத் தீவினை அடையாவே.

Vishnu that slumbers on the sea brimful of water and Brahma, went
in quest of Him burrowing deep upto the base of the earth and flew
upto the bourne of the heavens in vain, as He
stood as a column of coralline flame, unbeholdable by them.

He is our Karpaka entempled in Kaṭikkuḷam dight with sky-high gardens.
Lo, evill karma will not touch them who are valiant
to hail His gloriously ankleted feet. 9

1147. குண்டர் தம்மொடு சாக்கியர் சமணரும், குறியினில் நெறி நில்லா
மிண்டர் மிண்டு உரை கேட்டு, அவை மெய் எனக் கொள்ளன்மின்! விடம் உண்ட
கண்டர், முண்டம் நல் மேனியர், கடிக்குளத்து உறைதரும் எம் ஈசர்,
தொண்டர் தொண்டரைத் தொழுது அடி பணிமின்கள்!தூ நெறி எளிது ஆமே.

The obstinate and obdurate Buddhists and the Jains are ignoramuses that follow
not what they preach. Listen not to their falsehoods; they aren't good.
Our God is the quaffer of the venom; He wears the three
stripes of ash on His divine person.
He, our God, is entempled in Kaṭikkuḷam. Do adore the feet of
the servitors of His servitors. Lo, you will gain, with ease, the redemptive way. 10

1148. தனம் மலி புகழ் தயங்கு பூந்தராயவர்மன்னன்--நல் சம்பந்தன்--
மனம் மலி புகழ் வண் தமிழ்மாலைகள் மால்அதுஆய், மகிழ்வோடும்,
கனம் மலி கடல் ஓதம் வந்து உலவிய கடிக்குளத்து அமர்வானை,
இனம் மலிந்துஇசை பாட வல்லார்கள், போய் இறைவனோடு உறைவாரே.

The goodly Gnānasambandhan, the Prince of Pūntharāi abounding
in opulence and glory, with all his manam, and in delight great,
has sung on the God of Kaṭikkuḷam which is
close to the billowy sea, these garlands of magnanimous Tamiḻ.
They that are valiant to hail these psalms in dulcet music,
companied with His devotees will gain Siva and dwell with Him. 11

105. திருக் கீழ்வேளூர் நட்டராகம்

105. KEEZHVĒḶŪR

1149. மின் உலாவிய சடையினர், விடையினர், மிளிர்தரும் அரவோடும்
பன் உலாவிய மறைஒலி நாவினர், கறை அணி கண்டத்தர்,
பொன் உலாவிய கொன்றைஅம்தாரினர், புகழ் மிகு கீழ்வேளூர்
உன் உலாவிய சிந்தையர்மேல் வினை ஓடிட, வீடு ஆமே.

Fulgurant is His matted hair; His mount is the Bull.
He is adorned with a bright adder; He is a chanter
of the resounding Vedas which are frequently chanted.
He is the wearer of the wreath of golden *kondrais*.
He is entempled in the glorious Keezhvēḷūr.
The karma of those that meditate on Him will cease
and they will come by deliverance. 1

1150. நீர் உலாவிய சடைஇடை அரவொடு, மதி, சிரம்நிரைமாலை,
வார் உலாவிய வனமுலையவளொடு மணி சிலம்புஅவை ஆர்க்க,
ஏர் உலாவிய இறைவனது உறைவுஇடம் எழில் திகழ் கீழ்வேளூர்
சீர் உலாவிய சிந்தைசெய்து அணைபவர் பிணியொடு வினை போமே.

On His long and extensive matted crest abide the Ganga
brimful of water, the adder and the garland of a skull.
With His Consort whose breasts are cinctured with
a breast-band, and with His vibrant anklets,
He, the lofty God, abides at the beautiful Keezhvēḷūr.
They, blessed with glorious chinta, who gather here to adore Him,
will stand freed from their karma and afflicting maladies. 2

1151. வெண்நிலா மிகு விரிசடை அரவொடும், வெள்எருக்கு, அலர்மத்தம்,
பண் நிலாவிய பாடலோடு ஆடலர் பயில்வுஉறு கீழ்வேளூர்,
பெண் நிலாவிய பாகனை, பெருந்திருக்கோயில் எம்பெருமானை,
உள்-நிலாவி நின்று உள்கிய சிந்தையார் உலகினில் உள்ளாரே.

On His extensive matted crest abide the white rayed
moon,the serpent and the flowers of white *erukku.*
His great and divine temple is at Keezhvēḷūr where flourish
the practitioners of *pann*-laden songs, and dance.
Our God is concorporate with His Woman. They that adore Him
with their inly-melting chinta,will thrive in this world, poised in godliness. 3

1152. சேடு உலாவிய கங்கையைச் சடைஇடைத் தொங்கவைத்து அழகுஆக
நாடு உலாவிய பலி கொளும் நாதனார், நலம் மிகு கீழ்வேளூர்ப்
பீடு உலாவிய பெருமையர், பெருந்திருக்கோயிலுள் பிரியாது
நீடு உலாவிய நிமலனைப் பணிபவர் நிலை மிகப் பெறுவாரே.

He, the Chief of gods, bears on His beautiful matted
crest the glorious Ganga, adangle; He goes about
seeking alms throughout the realm.
He abides in the lofty and majestic delubrum
of the weal-conferring Keezhvēḷūr.
They that adore uninterrupted our God, the Ninmalan
of sempiternal athanasy, will, ever be poised in beatitudinous bliss. 4

1153. துன்று வார்சடைச் சுடர் மதி, நகுதலை, வடம் அணி சிரமாலை,
மன்று உலாவிய மா தவர் இனிது இயல் மணம் மிகு கீழ்வேளூர்
நின்று நீடிய பெருந்திருக்கோயிலின் நிமலனை, நினைவோடும்
சென்று உலாவி நின்று, ஏத்த வல்லார் வினை தேய்வது திணம் ஆமே.

On His long and dense matted hair, He sports
the radiant moon and the smiling skull fastened to a wreath.

He, the sempiternal *Ninmalan* abides in the lofty,
great and divine temple at the suaveolent Keezhvēḷūr
where abide the *tapaswis* who constantly meditate on the Citrambalam.
The cruel karma of those that constantly think on Him, our God,
here entempled, will, without doubt, wane total. 5

1154. கொத்து உலாவிய குழல் திகழ் சடையனை, கூத்தனை, மகிழ்ந்து உள்கித்
தொத்து உலாவிய நூல் அணி மார்பினர் தொழுது எழு கீழ்வேளூர்--
பித்து உலாவிய பத்தர்கள் பேணிய--பெருந்திருக்கோயில் மன்னும்
முத்து உலாவிய வித்தினை, ஏத்துமின்! முடுகிய இடர் போமே.

His splendorous matted tresses are adorned with the bunches of blooms.
He is the Dancer par excellence, whom the Brahmins that wear
the strands of sacred thread hail and adore inly rejoicing.
Our God abides in the great and grand temple divine at Keezhvēḷūr
fostered in devotion by His bhaktas who are mad after Him.
Hail Him the Pearl who is the Seed (Hiranyagarba).
Troubles that afflict you sore, will perish. 6

1155. பிறை நிலாவிய சடைஇடைப் பின்னலும் வன்னியும் துன் ஆரும்
கறை நிலாவியகண்டர், எண்தோளினர், காதல்செய் கீழ்வேளூர்--
மறை நிலாவிய அந்தணர் மலிதரு--பெருந்திருக்கோயில் மன்னும்
நிறை நிலாவிய ஈசனை நேசத்தால் நினைபவர் வினை போமே.

His matted hair is densely plaited with the leaves of *Vanni*; His crest
bears the crescent. His throat is stained with the murk of venom;
He is the eight-armed, He, in love, abides in the divinely
great and glorious temple at Keezhvēḷūr where flourish the well-versed
in the Vedas. The karma of them that contemplate Him,
the Perfect God, in devotion, will flee away. 7

1156. மலை நிலாவிய மைந்தன் அம் மலையினை எடுத்தலும், அரக்கன்தன்
தலைஎலாம் நெரிந்து அலறிட, ஊன்றினான் உறைதரு கீழ்வேளூர்--
கலை நிலாவிய நாவினர் காதல்செய்--பெருந்திருக்கோயிலுள்
நிலை நிலாவிய ஈசனை நேசத்தால் நினைய, வல்வினை போமே.

He is the puissant One; when the Asura durst uproot
His Mount, He so pressed it with a toe of His foot,
that all his heads were crushed and he wailed aloud.
He abides in the great and gloriously divine temple at Keezhvēḷūr where
thrive His loving devotees-- the Brahmins well-versed in the scriptures.
The karma of those that meditate our aeviternal
God, in intense bhakti, will flee away. 8

1157. மஞ்சு உலாவிய கடல் கிடந்தவனொடு மலரவன் காண்பு ஒண்ணாப்
பஞ்சு உலாவிய மெல்அடிப் பார்ப்பதி பாகனை, பரிவோடும்
செஞ்சொலார்பலர் பரவிய தொல்புகழ் மல்கிய கீழ்வேளூர்
நஞ்சு உலாவிய கண்டனை, நணுகுமின்! நடலைகள் நணுகாவே.

He stood unbeholdable unto Vishnu who slumbers on the sea
over which clouds sail and Brahma seated on the great Lotus,
when they went in quest of Him, our God.
He is concorporate with Pārvati whose feet are soft like the silk-cotton.
He is entempled in Keezhvēḷūr of hoary fame.
Gain access to Him whose throat holds
the venom; troubles will not approach you. 9

1158. சீறு உலாவிய தலையினர் நிலை இலா அமணர்கள், சீவரத்தார்,
வீறு இலாத வெஞ்சொல்பல விரும்பன்மின்! கரும்பு அமர் கீழ்வேளூர்--
ஏறு உலாவிய கொடியனை--ஏதம் இல் பெருந்திருக்கோயில் மன்னு
பேறு உலாவிய பெருமையன் திருவடி பேணுமின்! தவம் ஆமே.

Samaṇas who are the wrathful tricchotillomaniacs and the debased
and ochre-robed Buddhists articulate but inglorious words,
void of substance. Listen not to them.
He whose flag sports the signum of His Bull, abides in the glorious,
divine and flawless temple at Keezhvēḷūr where thrive bees galore.
Hail and adore the divine feet of Him, the glorious
boon-giver. This counts for *tapas* unto you. 10

1159. குருண்ட வார்குழல்சடை உடைக் குழகனை, அழகு அமர் கீழ்வேளூர்த்
திரண்ட மா மறையவர் தொழும் பெருந்திருக்கோயில் எம்பெருமானை,
இருண்ட மேதியின் இனம் மிகு வயல் மல்கு புகலி மன் சம்பந்தன்
தெருண்ட பாடல் வல்லார்அவர், சிவகதி பெறுவது திடம் ஆமே.

He is the ever-young One of matted tresses. He, our God, abides in
the gloriously divine temple at Keezhvēḷūr adored by the great Vedic Brahmins,
in all their strength. Gnānasambandhan of Pukali where abound dark buffaloes
and fields, has on the God of Keezhvēḷūr, sung these psalms
of absolute clarity. They that are valiant in these psalms, will without
doubt, gain the way suffused with Siva's grace. 11

106. திரு வலஞ்சுழி நட்டராகம்

106. TIRUVALANJUZHI

1160. என்ன புண்ணியம் செய்தனை--நெஞ்சமே! இருங்கடல் வையத்து,
முன்னம் நீ புரி நல்வினைப் பயன்இடை, முழுமணித்தரளங்கள்
மன்னு காவிரி சூழ் திரு வலஞ்சுழிவாணனை, வாய் ஆரப்
பன்னி, ஆதரித்து ஏத்தியும் பாடியும், வழிபடும் அதனாலே.
We have come by this blessed life thanks to our righteous deeds in
our past births; so, in this birth, on earth in orbis terrarum
we live devotedly, sing His praises with
willing lips and hail the God of Tiruvalanjuzhi on the bank
of the Kāviri abounding in unbroken gems and pearls.

Lo, O heart, what type punya par excellence,
have we performed to merit this life? 1

1161. விண்டு ஒழிந்தன, நம்முடை வல்வினை-விரிகடல் வரு நஞ்சம்
உண்டு இறைஞ்சு வானவர் தமைத் தாங்கிய இறைவனை, உலகத்தில்
வண்டு வாழ் குழல் மங்கை ஓர் பங்கனை, வலஞ்சுழி இடம்ஆகக்
கொண்ட நாதன், மெய்த்தொழில் புரி தொண்டரோடு இனிது இருந்தமையாலே.

He quaffed the oceanic venom and saved the Devas;
He is concorporate with His Woman in whose tresses bees lie cradled.
Our God is the Chief of gods. He is enshrined in Vlanjuzhi.
As we dwell companied with His servitors who truly render service
unto Him, our cruel karma stands shattered into smithereens. 2

1162. திருந்தலார் புரம் தீ எழச் செறுவன; இறலின்கண் அடியாரைப்
பரிந்து காப்பன; பத்தியில் வருவன; மத்தம் ஆம் பிணிநோய்க்கு
மருந்தும் ஆவன; மந்திரம் ஆவன--வலஞ்சுழி இடம்ஆக
இருந்த நாயகன், இமையவர் ஏத்திய, இணை அடித்தலம் தானே.

It is the puissance of God's sacred feet twain
that gutted with fire the unreformable Asura's walled-citadels.
It is His feet twain that protect in grace His devotees.
They manifest before true bhaktas; they are, indeed,
the medicine and the curative mantra of those
that suffer from frenzy and fettering maladies.
Lo, our God-Master abides in Valanjuzhi adored by Devas. 3

1163. கறை கொள் கண்டத்தர்; காய்கதிர் நிறத்தினர்; அறத்திறம் முனிவர்க்கு அன்று--
இறைவர்--ஆல்இடை நீழலில் இருந்து உகந்து இனிது அருள் பெருமானார்;
மறைகள் ஓதுவர்; வருபுனல் வலஞ்சுழிஇடம் மகிழ்ந்து, அருங்கானத்து,
அறை கழல் சிலம்பு ஆர்க்க, நின்று ஆடிய அற்புதம் அறியோமே!

His throat is murky; His body is ruddy like blazing flame.
Of yore, He, our God, seated in the shade of the Banyan tree, rejoiced to
teach the great and manifold dharma unto the sages.
He is a chanter of the Vedas; He blissfully abides in Valanjuzhi
on the bank of the Kāviri. We canst not comprehend the splendorous
wonder of His dance which He enacts,
the while His cilampus resonate vibrantly. 4

1164. மண்ணர்; நீரர்; விண்; காற்றினர்; ஆற்றல்ஆம் எரிஉரு; ஒருபாகம்
பெண்ணர்; ஆண் எனத் தெரிவு அரு வடிவினர்; பெருங்கடல் பவளம் போல்
வண்ணர்; ஆகிலும், வலஞ்சுழி பிரிகிலார்; பரிபவர் மனம் புக்க
எண்ணர்; ஆகிலும் எனைப் பல இயம்புவர், இணை அடி தொழுவாரே.

His form is of earth, water, air the unbearable fire and space;
it is impossible to reckon His body as a male's or a female's.
Though His hue is like the coral of the vast sea, it is
at Valanjuzhi, He abides inseparably. He indwells and pervades
the inner sensoria of those that are wholly devoted to Him.
It is with multitudinous encomia, His feet
twain are hailed and adored by His devotees. 5

1165. ஒருவரால் உவமிப்பதை அரியது ஓர் மேனியர்; மடமாதர்
இருவர் ஆதரிப்பார்; பலபூதமும் பேய்களும் அடையாளம்;
அருவராதது ஓர் வெண்தலை கைப் பிடித்து, அகம்தொறும் பலிக்கு என்று
வருவரேல், அவர் வலஞ்சுழி அடிகளே; வரி வளை கவர்ந்தாரே!

Our God is beyond compare; such is His divine frame;
on His crown is the damsel Ganga; He shares His
body with His Woman; He loves these two. While Bhūtas and ghouls
encircle Him, and sing and dance, He totes a white skull which He deems
not abominable and goes about seeking alms from every house.

If He be such, He is, indeed, the God of Valanjuzhi.
Lo, He has filched my bangles. 6

1166. குன்றியூர், குடமூக்குஇடம், வலம்புரம், குலவிய நெய்த்தானம்,
என்று இவ் ஊர்கள்இ(ல்)லோம் என்றும் இயம்புவர்; இமையவர் பணி கேட்பார்;
அன்றி, ஊர் தமக்கு உள்ளன அறிகிலோம்; வலஞ்சுழி அரனார்பால்
சென்று, அ(வ்)ஊர் தனில்-தலைப்படல் ஆம் என்று சேயிழை தளர்வு ஆமே.

The Devas await His commands. Lo, He comes announcing that He is
of Kundriyūr, Kutamūkku and Valampuram and the lovely Neitthānam.
These apart, we know not of His other places.
Yet the bejewelled beloved of His, languishing all
the while, says that if access as well as abidance
is gained at Hara's Valanjuzhi, survival is plausible. 7

1167. குயிலின் நேர் மொழிக் கொடியிடை வெருஉற, குலவரைப் பரப்புஆய
கயிலையைப் பிடித்து எடுத்தவன் கதிர் முடி தோள்இருபதும் ஊன்றி,
மயிலின் ஏர் அன சாயலோடு அமர்ந்தவன், வலஞ்சுழி எம்மானைப்
பயில வல்லவர் பரகதி காண்பவர்; அல்லவர் காணாரே.
Her words are canorous like the *kuyil*'s; Her waist
is willowy; Her mien is like the peafowl's. She is Uma.
Causing Her to dread, when Ravana durst uproot
the supremely great Kailās, He pressed with
a toe and crushed his ten radiant heads and twenty shoulders.
Our God concorporate with His Woman is entempled in Valanjuzhi.
Only they that are valiant to cultivate bhakti for Him 8
will gain the supernal way, not so others, alas!

1168. அழல் அது ஓம்பிய அலர்மிசை அண்ணலும், அரவு அணைத் துயின்றானும்,
கழலும் சென்னியும் காண்பு அரிது ஆயவர்; மாண்பு அமர் தடக்கையில்
மழலை வீணையர்; மகிழ் திரு வலஞ்சுழி வலம்கொடு பாதத்தால்
சுழலும் மாந்தர்கள் தொல்வினை அதனொடு துன்பங்கள் களைவாரே.

The Noble Brahma who is seated on the Lotus and who fosters the ritual
fire and Vishnu who sleeps on his snake-bed, went in quest of His
crown and ankleted feet, in vain. His broad hand holds
the *vina*, the notes of which are sweet like the babbling of a child.
He is blissfully entempled in Valanjuzhi.
Devotees who circumambulate on foot, His shrine, are the ones
who can weed out their hoary karma and manifold miseries. 9

1169. அறிவு இலாத வன்சமணர்கள், சாக்கியர்,--தவம் புரிந்து அவம் செய்வார்--
நெறி அலாதன கூறுவர்; மற்றுஅவை தேறன்மின்! மாறா நீர்
மறி உலாம் திரைக் காவிரி வலஞ்சுழி மருவிய பெருமானைப்
பிறிவு இலாதவர் பெறு கதி பேசிடில், அளவுஅறுப்பு ஒண்ணாதே.

The addle-pated and fierce Samanas and the Tērās
perform *tapas* but enact evil deeds.
They propagate the way unrighteous. Ignore them.
On the contrary, if you hail the ways of those that part not from
Valanjuzhi on the bank of the Kaviri of recurring waves,
know that the resulting beatitude is ineffable. 10

1170. மாது ஓர்கூறனை, வலஞ்சுழி மருவிய மருந்தினை, வயல் காழி
நாதன்--வேதியன், ஞானசம்பந்தன்--வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்து, இசை கற்று வல்லார், சொலக் கேட்டு உகந்தவர் தம்மை
வாதியா வினை; மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்து அடையாவே.

He is concorporate with His Woman; He is the God of Valanjuzhi;
He is like the catholicon.On Him, the Prince of Kāzhi abounding
in fields, the one who is well-versed in the Vedas, has sung
this garland of Tamil̲. Karma will not afflict them that, in love,
sing these psalms married to dulcet music, here or hereafter.
They will flourish untouched by grief. 11

107. திருக் கேதீச்சுரம் நட்டராகம்

107. TIRUKKĒDEECCHURAM

1171. விருது குன்ற, மாமேரு வில், நாண் அரவா, அனல்-எரி அம்பா,
பொருது மூஎயில் செற்றவன் பற்றி நின்று உறை பதி--எந்நாளும்
கருதுகின்ற ஊர்--கனைகடல் கடி கமழ் பொழில் அணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சுரம் கைதொழ, கடுவினை அடையாவே.

With the Mount Meru as His ever-triumphant bow, the Snake
as its string and the arrow blazing Agni-tipt, our martial God
gutted with fire the triad of the walled-citadels of the Asuras.
He, our God, willingly abides at Māthōttam circled by the roaring sea,
and engirt with ornate and fragrant gardens at Kēdeecchuram, reckoned
by many bhaktas as the fit and proper place of adoration.
Cruel karma'll not afflict those that adore with their hands, this shrine. 1

1172. பாடல் வீணையர், பலபலசரிதையர், எருது உகைத்து அரு நட்டம்-
ஆடல் பேணுவர், அமரர்கள் வேண்ட நஞ்சு உண்டு இருள்கண்டத்தர்,
ஈடம் ஆவது--இருங்கடல் கரையினில் எழில் திகழ் மாதோட்டம்,
கேடு இலாத கேதீச்சுரம் கைதொழ, கெடும், இடர் வினைதானே.
He sings strumming His *Vina*; manifold are His annals;
His mount is the Bull; He enacts variform dance.
Implord by Devas, He quaffed the venom and blued His throat.
He is entempled in the splendorous Māthōttam circled by
the vast sea at the flawless Kēdeecchuram.
Troubles and karma of those that hail this shrine,
with their hands, will perish. 2

1173. பெண் ஓர்பாகத்தர், பிறை தவழ் சடையினர், அறை கழல் சிலம்பு ஆர்க்கச்
சுண்ணம் ஆதரித்து ஆடுவர், பாடுவர், அகம்தொறும் இடு பிச்சைக்கு
உண்ணல் ஆவது ஓர் இச்சையின் உழல்பவர், உயர்தரு மாதோட்டத்து
அண்ணல், நண்ணு கேதீச்சுரம் அடைபவர்க்கு அருவினை அடையாவே.

He is concorporate with His Woman; on His matted crest
crawls the crescent. His silampu and anklet resonate
as He dances; He is willingly bedaubed with the sacred ash;
eke doth He sing. Lo, He roams about borne by
the desire of seeking alms from every house.
He is the Noble One that abides in Māthōttam--lofty
and accrescent-- at Kēdeecchuram. Twyfold karma
will not get attached to them that gather here and Him adore. 3

1174. பொடி கொள் மேனியர், புலிஅதள் அரையினர், விரிதரு கரத்து ஏந்தும்
வடிகொள் மூஇலைவேலினர், நூலினர், மறிகடல் மாதோட்டத்து
அடிகள், ஆதரித்து இருந்த கேதீச்சுரம் பரிந்த சிந்தையர் ஆகி,
முடிகள் சாய்த்து, அடி பேண வல்லார் தம்மேல் மொய்த்து எழும் வினை போமே.

His body is bedaubed with the holy ash; His waist is clad in a tiger-skin;
His open hand wields the well-crafted and the three-leaved spear;
He is adorned with the sacred thread. He abides in Māthōttam
upon the sea of recurring waves, at His beloved Tirukkēdeecchuram,
The swarming karmic deeds of those of loving *chinta*,
who bow low their heads at His feet 'll flee away. 4

1175. நல்லர், ஆற்றவும் ஞானம் நன்கு உடையர்--தம் அடைந்தவர்க்கு அருள் ஈய
வல்லர், பார் மிசைவான் பிறப்புஇறப்பு இலர், மலி கடல் மாதோட்டத்து
எல்லை இல் புகழ் எந்தை, கேதீச்சுரம் இராப்பகல் நினைந்து ஏத்தி,
அல்லல் ஆசு அறுத்து, அரன்அடி இணை தொழும் அன்பர் ஆம் அடியாரே.
He is supremely good; His is the great Gnosis; He grants grace to them
that reach Him; He never gets born on the earth or the celestial world.
He, our Father, abides in Māthōttam circled by
the swelling sea at the endlessly glorious Kēdeecchuram.
The loving devotees that consciously hail Hara's feet twain,
night and day, rid tracelessly of troubles, become His servitors. 5

1176. பேழை வார்சடைப் பெருந் திருமகள்தனைப் பொருந்த வைத்து ஒருபாகம்
மாழை அம் கயல் கண்ணிபால் அருளிய பொருளினர், குடிவாழ்க்கை--
வாழை அம்பொழில் மந்திகள் களிப்பு உற மருவிய மாதோட்ட,
கேழல்வெண்மருப்பு அணிந்த நீள் மார்பர், கேதீச்சுரம் பிரியாரே.

On His glorious matted crest He sports becomingly the great and divine Ganga;
He for ever, graces His Consort whose comely eyes roll like *kayal*.
He abides at Māthōttam in whose plantain gardens female monkeys thrive
in delight great, at Kēdeecchuram from which He, whose
broad chest sports the white tusk of the Hog, never parts at all. 6

1177. பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிப் பல்உலகினில் உயிர் வாழ்க்கை
கண்ட நாதனார், கடலிடம் கைதொழ, காதலித்து உறை கோயில்--
வண்டு பண்செயும் மா மலர்ப்பொழில் மஞ்ஞை நடம்இடு மாதோட்டம்,
தொண்டர் நாள்தொறும் துதிசெய, அருள்செய் கேதீச்சுரம் அதுதானே.

He is the Chief of gods, who, of yore, inculcated dharma to the Four;
He devises embodiments for all lives in many worlds.
He abides in Māthōttam in whose great and flowery
gardens bees hum in *pann* and peacocks dance.
He, in love, is entempled at Kēdeecchuram where His
servitors stand blessed to hail Him daily. 7

1178. தென் இலங்கையர்குலபதி, மலை நலிந்து எடுத்தவன், முடி திண்தோள்
தன் நலம் கெட அடர்த்து, அவற்கு அருள்செய்த தலைவனார்--கடல்வாய் அப்
பொன் இலங்கிய முத்து மா மணிகளும் பொருந்திய மாதோட்டத்து,
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சு--கேதீச்சுரத்து உள்ளாரே.

He is the Prime God that crushed the heads and arms
of the king of Southern Lanka, when he, with great
effort, durst uproot His Mount imperilling his weal.
Then when re rued, He blessed him with grace. He abides in

Māthōttam abounding in gold, pearls, rubies and precious stones,
at Kēdeecchuram where He blesses with grace
His servitors abounding in devotion. 8

1179. பூஉளானும் அப் பொருகடல்வண்ணனும், புவி இடந்து எழுந்து ஓடி,
மேவி நாடி, நுன் அடிஇணை காண்கிலா வித்தகம் என் ஆகும்?
மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன் நகர் மன்னி,
தேவிதன்னொடும் திருந்து கேதீச்சுரத்து இருந்த எம்பெருமானே!

Brahma seated on the Lotus and Vishnu, the sea-hued, flew up, and burrowed deep
the earth; yet You remained unbeholdable unto them that could not at all,
eye Your feet twain. Lo, Yours is the strategy par excellence.
Concorporate with Your Consort, You, our God, for ever,
abide in the good city of Māthōttam densely abounding
in mango, areca-nut and banana trees, at the redeeming Kēdeecchuram. 9

1180. புத்தராய்ச் சில புனை துகில் உடையவர், புறன்உரைச் சமண்ஆதர்,--
எத்தர் ஆகி நின்று உண்பவர்--இயம்பிய ஏழைமை கேளேன்மின்!
மத்தயானையை, மறுகிட உரிசெய்து போர்த்தவர், மாதோட்டத்து
அத்தர், மன்னு பாலாவியின் கரையில் கேதீச்சுரம் அடைமி(ன்)னே!

The Buddhists shrouded in ochre-robes are brainless;
the deceitful Samanas eat standing. Listen not to their blabberings.
Of yore, our God, even as the musty tusker that confronted Him
stood staring, peeled off its skin and manled Himself in it.
He abides in Māthōttam on the bank of the Pālāvi
at Kēdeecchuram. Reach it in all celerity. 10

1181. மாடுஎலாம் மணமுரசு எனக் கடலினது ஒலி கவர் மாதோட்டத்து,
ஆடல் ஏறு உடை அண்ணல் கேதீச்சுரத்து அடிகளை, அணி காழி
நாடுஉளார்க்கு இறை--ஞானசம்பந்தன்--சொல் நவின்று எழு பாமாலைப்
பாடல்ஆயின பாடுமின், பத்தர்காள்! பரகதி பெறல்ஆமே.

Close by, the roaring sea resounds like wedding-drums;
Māthottam is where in its Kēdeeccharam, our Noble God whose mount
is the Bull, abides. On Him, Gnānasambandhan of ornate Kāzhi
whose chief He is, has sung this garland of hymns.
Ye bhaktas, sing these soul-stirring psalms; You will gain the celestial life. 11

108. திரு விற்குடிவீரட்டம் நட்டராகம்
108. TIRUVIṞKUDI VEERAṬṬAM

1182. வடிகொள் மேனியர், வான மா மதியினர், நதியினர், மது ஆர்ந்த
கடி கொள் கொன்றை அம் சடையினர், கொடியினர், உடை புலிஅதள் ஆர்ப்பர்,
விடைஅது ஏறும் எம்மான், அமர்ந்து இனிது உறை விற்குடிவீரட்டம்,
அடியார்ஆகி நின்று, ஏத்த வல்லார் தமை அருவினை அடையாவே.

Beautiful is His body; He wears the skyey crescent; He sports the Ganga
on His crest adorned with fragrant and melliferous *kondrais*.
He sports a flag; He is clad in a tiger-skin. He rides the Bull.
Our God is sweetly entempled in Viṟkudi Veeraṭṭam. The twyfold karma
will not touch those bhaktas who, poised in servitorship, hail Him. 1

1183. களம் கொள், கொன்றையும் கதிர் விரி மதியமும் கடி கமழ் சடைக்கு ஏற்றி,
